# INSTITUTE OF PHYSICS, SRI LANKA

Vidya Mandiraya, 120/10, Wijerama Mawatha, Colombo 7, Sri Lanka. (*Incorporated by an Act of Parliament, Act No. 12 of 1986*)

*Web:http://www.ipsl.lk*

**இலங்கை இரண்டாவது அணுவியல் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி (SLNSO) – 2025**

**அரசு மற்றும் அரசு சாரா பள்ளிகளில் கல்வி கற்கும் தரம் 12,13 மாணவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்**

இலங்கை இரண்டாவது அணுவியல் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி இலங்கை பௌதீக விஞ்ஞான (IPSL) நிறுவனத்தால் (SLNSO)இலங்கை அணுவியல் விஞ்ஞான ஒலிம்பியாட் குழுவுடன் ஒன்றிணைந்து ஒழுங்கு செய்துள்ளது.மேலும் அரசு மற்றும் அரசுசாரா பள்ளிகளைச் சேர்ந்த (G.C.E.A/L) மாணவர்களுக்கானது. 2025 ஜனவரி மாதம் 11 திகதி அன்று சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் போட்டி நடாத்தப்படும். விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2024.12.28 ஆகும்.

**பரீட்சை நிலையம்**

மாணவர்கள் கொழும்பு பல்கலைக்கழகம்,ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம்,வயம்ப பல்கலைக்கழகம்,ரஜரட பல்கலைக்கழகம், யாழ்பாணம் பல்கலைக்கழகம், மட்டக்களபு பல்கலைக்கழகம் ருஹுணு பல்கலைக்கழகம், ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம் பிராந்திய நிலையம் கண்டி ஆகிய நிறுவனங்களில் ஒலிம்பியாட் பரீட்சைக்கு கலந்து கொள்ள முடியும். ஒரு நிலையத்திற்கு பதிவு செய்யும் மாணவர் தொகை மிகவும் குறைவாகக் காணப்படின் அவர்கள் அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு இணைப்பு செய்யப்படுவார்கள்.

**தகுதி மற்றும் பரீட்சை வடிவம்**

விண்ணப்பிக்கும் மாணவர்கள் தரம் 12 மற்றும் 13ம் வகுப்புகளில் கல்வி கற்பவராகவும் 2025.ஜனவரி மாதம் முலாம் திகதிக்கு 20 வயதிற்கு உட்பட்டமாணவர்கள் இப்போட்டிக்கு விண்ணப்பிக்கலாம். வினாப்பத்திரம் 50 பல் தேர்வு வினாக்களைக் கொண்டதாகும். மற்றும் 25% வினாக்கள் உயர்தரம் பௌதீக விஞ்ஞானப் பாடத்திட்டத்தை அடிப்படையாக் கொண்டு அமைந்திருக்கும்.

**சர்வதேச பிரதிநிதித்துவம் மற்றும் விருதுகள்.**

IPSL மூலமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வருடாந்த போட்டியின் போது தேசிய மட்ட வெற்றியாளர்களுக்கு தங்கம்,வெள்ளி,உலோக கிண்ணம் மற்றும் தேர்ச்சிச் சான்றிதல் வழங்கப்படும்.2025ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மலேசியாவில் நடை பெறவுள்ள சர்வதேச அணு அறிவியல் ஒலிம்பியாட் INSO க்கான போட்டியில் பங்குபற்ற IPSL வழிக்காட்டலுடன் சிறந்த செயல்திறன் கொண்ட நான்கு சிறந்த போட்டியாளர்கள் இலங்கையில் இருந்து பிரதிநிதித்துவப்படுத்துவார்கள்.

குறிப்பு:- சர்வதேச போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் 2025.ஆகஸ்ட் மாதம் 31ம் திகதிக்கு 20 வயதை அடைந்தவராக இருத்தல் வேண்டும். INSO என்பது (IAEA) முழுமையான அனுசரணையுடன் சர்வதேச அணுசக்தி முகாமையின் தொழிநுட்ப திட்டத்தின் கீழ் நடாத்தப்படும் வருடாந்த சர்வதேச போட்டியில். 2ம் மற்றும் 3ம் நிலைகளில் அணு அறிவியல் மற்றும் தொழிநுட்பக் கல்வியை ஆதரித்து 2024 ஆம் ஆண்டில், Philippines ல் நடைப்பெற்ற போட்டியில் இலங்கையைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் ஆரம்ப INSO ல் கலந்து கொண்டு ஒரு தங்கப் பதக்கத்தையும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் வென்றனர்.

**விண்ணப்பிக்கும் முறை**

மேலே குறிப்பிட்ட தேசிய ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றுவதற்கு விருப்பமான மாணவர்களுக்கு www.ipsl.lk என்கின்ற Website இணைந்து போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும்.அத்துடன் கடந்த கால வினாத்தாள்களையும் பெற்றுக் கொளளலாம்.பரீட்சை அனுமதிப்பத்திரம் உங்களுக்கு online விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள email முகவரிக்கு அனுப்பப்படும்.அனுமதிப்பத்திரம் பரீட்சை நடைபெறுவதற்கு முன்பு ஒரு கிழமைக்கு முன் கிடைக்காவிடின் தயவு செய்து அதுபற்றி slnso.ipsl@gmail.com என்ற SLNSO இலங்கை அணுவியல் விஞ்ஞான ஒலிம்பியாட் அலுவலகத்துடன் தொடர்ப்பு கொள்ளவும்.

**தொடர்ப்பு பற்றிய தகவல்**

மேலதிக விபரங்களுக்காக பின்வரும் எண்ணுடன் 0776972377 பேராசிரியர் சாந்த கமகே என்பவருடன் தொடர்ப்பு கொள்ளவும். (மதியம் 12.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரையும் பின்பு இரவு மணி 9.00 தொடக்கம் 10.00 வரை). மேலும் விவரங்களுக்காக (https://ipsl.lk/nuclear-science-olympiad/) என்ற இணை முகவரியை பார்வையிடவும்.

**பேராசிரியர் என்.ஜி.எஸ்.சாந்தகமகே**
**தேசிய ஒருங்கிணைப்பாளர்/SLNSO**
பௌதீக விஞ்ஞான பிரிவு,ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்